# இந்துசாதனம்.

(1889)

| பத்திராக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஷ 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: ,, ரூ. | 8-00 |
| தொலைவாய்ப்பகுதி: ,, ரூ | 9.00 |
| தனிப்பிரதி: சதம் | 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு:—ஒரு கலம் | ரூ. 9-00 |
| ,, அரைக்கலம் | ரூ. 4-50 |
| ,, கால்கலம் | ரூ 3-00 |

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௪௦. } யாழ்ப்பாணம்:—விபவஞூ ஐப்பசிமீ ௨௭௨, (1928 நவம்பர் 12) திங்கட்கிழமை. { இலக்கம்—௯அ.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முன்னிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் கிரிமிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் குதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,

சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை

காத்தான்குடி போஸ்டு,

மட்டக்களப்பு,

இலோன்.

(M. 36.)

## அறிவித்தல்.

இத்தாற்சகலருமறியவேண்டியது தற்காலம் கண்டியில் வசிக்கும் காசிப்பிள்ளை கந்தவனம் ஆகிய நான் எனது பெண்சாதி புலோலி மேற்கு க. க கந்தையா மகள் சிவகாமிப்பிள்ளையுடைய சம்மதத்துடன் நாங்கள் இருபேரும் இப்போ சிலநாட்களாய்ப் பிரிந்திருப்பதனுலும் எனது பெண்சாதிக்கும் பிள்ளைக்கும் காணக்கூடிய செலவு நான்கொடுத்து வருகிறபடியாலும் இனிமேல் எனது பெண்சாதியை நினைத்துக்கொடுக்கும் எந்தக்கடனுக்காவது நான் பாத்திரவாளியாகமாட்டேன் என்றதை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு.

சி. க. கா. கந்தவனம்.

கண்டி,

1—11—28

(Mis 1323)

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்

(1) மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறீஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்த தருக்க முடிவு இதுவோர் அறிவுபயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.

இது கிறீஸ்தமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.

—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசினோத்தரம். —விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான இடங்கள்.

(1) சி. சு. இராஜையன், மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) ?. ?. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918 ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்.

மூலநிதி 8 லட்சம் ரூபா

இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,22,840.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாதகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எசசந்தி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானுல் 3 வீதம் வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீறியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக்கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்)

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

மு. தாமோதரம்பிள்ளை

மனேஜர்.

(Y 65)


## தலைநோவின் விலை என்ன?

ஒரு மணிநேரம் வரை ஒரு சமயம் வருத்தும் அல்லது ஒருநாள் முழுவதும் வாட்டும் இல்லாவிட்டால் தினசரி வந்து தொல்லைப்படுத்தும் இத்தலைநோவிலிருந்து தப்பிக்க என்னதான் கொடுக்க மாட்டீர்கள்? ஆனல் அதிகங் கொடுக்க வேண்டியதில்லை. ஒரு புட்டி

## லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

தான் வேண்டியது. உடனே சுகத்தைத்தரும். விலையைப்பற்றி நினைக்கவே மாட்டீர்கள். அதின் வேலை அவ்வளவு திருப்தியாயிருக்கும்.

இதுதான் இந்த ஆதிதைலத்தின் பிரக்கியாதிக்குக் காரணம்.



43 வருடங்களாய்க் கை கண்டது.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

3—28. Litts Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 61.)


## யாழ்ப்பாணம்
## கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனிவின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நளன் முதலிய அரசர்களுக்கு வந்த தீர்த்தமாடும் பெரும்பேறு பெற்றதும் யாழ்ப்பாணத்தில் மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடத்து வருகின்றது டி கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளாலும் பன்னீர்மரமும் நிற்கின்ற மடைசாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து தவைசனிலே டி மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினுல் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,

(Q. 113) வல்வெட்டித்துறை.


## விசேஷ இனும்.

உயர்ந்த மிலிடேரி காக்கிட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கெட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது ஒன்று ரூபா 2—8 மூன்று வாங்கினுல் 1 பட்டு மப்ளர் இனும் 6 வாங்கினுல் ஒரு கம்பளிப் போர்வை இனும்.

புதிய மாதிரி! விலைமலிவு!

16 முழம் இமிட்டேஷன் சரிகை.

தோட்டி காசிப்பூசேலை!!

இனும்! இனும்!! இனும்!!!

இமமாதிரியான அசல் தொட்டிப்பூபோட்ட சேலை ரூபா 100, 150, 200 போட்டால் தான் கிடைக்கும்.

எவருடை 22 காரட் ரோல்ட்கோல்ட் சவுட்சர்லாந்தில் செய்யப்பட்ட அழகுவாய்ந்த நிறமான 10 வருட உத்தரவாதமுள்ள ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் கடிகாரம் வாங்கு பவர்களுக்கு டி காசி பூசேலை இனுமாக அனுப்பப்படும் சரியான மணி காட்டும் கடிகாரத்தின் விலை சொற்பமே. ஒரு



கைப்பட்டையுடன் ரூபா 10—0—0 தான். தனியாக வாங்கினுல் புடவை 1-க்கு ரூபா 5—8—0 ஒரேகாலத்தில் 6 புடவை வாங்கினுல் ஒருபுடவை இனும் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,

வேப்பேரி போஸ்ட்,

சென்னைபட்டணம்

ASOKA & Co,

Vepery, P. O,

Madras.

(Q. 112)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு ஐப்பசிமீ ௨௰௨ திங்கட்கிழமை

## பெண்கள் சம்மதஞ்சொல்லுதல்.—2.

சட்ட நிருபணசபைக் கூட்டத்தில் பெண்கள் சம்மதஞ் சொல்லும் விஷயமாக ஸேர் பொன் இராமநாதனவர்கள்போன்ற அறிவும் அநுபவமும் படைத்தவர்கள் மாறுபாவே வாதாடுகின்றனர். நவீன நாகரீகத்தையும் மேலைத்தேசக் கல்வியையுங் கைக்கொள்வோர் மாத்திரம் பெண்கள் பொருட்டுப் பாடுபடுகின்றனர். கௌரவ மிஸ்ரர் துரைசுவாமியவர்கள் இந்த விஷயமாகப் பேசியபோது, பெண்களுக்கெனப் பிரத்தியேகமாகத் திருத்தங்கள் யாதும் வேண்டியதில்லையென்றும் பெண்கள் நடத்துஞ் சங்கங்கள் சபைகளையும் கல்வியையும் அரசினரும் இந்தச் சட்டநிருபணசபையும் பெரிதும் ஊக்கப்படுத்தி வருகின்றனரென்றும் இதுவரையில் பெண்கள் விஷயமாக எவ்வகையான குறையேனும் அலட்சியமேனும் நிகழவில்லையென்றும் பெண் பெண்தான்; ஆண் ஆண்தான்; பெண்ணை ஆணாக்குவது அசம்பாவிதமென்றுங் கூறினார். பின்னரும் ஸ்ரீ துரைசுவாமியவர்கள் மிக்க சீர்திருத்தத்தோடுகூடிய நாடெனப்படும் இங்கிலாந்திலும் சிலவருடங்கட்கு முன்னர்த்தான் பெண்களுக்குச் சுவதீனம் முதவிப்பட்டதெனவும், இங்கிலாந்திலே பெண்கள் ஆடவர்களைப்போல் உத்தியோகம் பார்த்தும் வேலைசெய்தும் தம்பிஷ்டமாக உழைக்கச் சீவிக்கச் செய்கிறார்களென்றும் இங்குள்ள பெண்கள் எதற்கும் ஆண்களையே நம்பியிருப்பவர்களென்றும் ஆனமையினால் ஆங்கிலமாதரைப் பின்பற்றி இங்குள்ள மகளிருக்கும் சம்மதஞ் சொல்லுதற்கான உரிமையுதவுதல் பொருந்தாதென்றுங் கூறினர்.

ஸ்ரீ துரைசுவாமியவர்கள் தம் பேச்சின் முடிவில் பின்வரும் பிரேரணையை எடுத்தாண்டனர்:—

"பெண்பாலாருக்கு வாக்குரிமை உதவுவது இந்தச் சங்கத்திற்குச் சம்மதமில்லையாயினும், கற்றவர்களென்றிருப்போர் சிலர் உரிமை கொடுக்கப்படவேண்டுமென விரும்பி நிற்றலால் தமிழிலேனும் சிங்களத்திலேனும் ஆங்கிலத்திலேனும் எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்தவரும் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுமாகிய பெண்களுக்கு வாக்குரிமை உதவப்படலாமென இச்சங்கம் அபிப்பிராயப்படுகின்றது.

கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்கள் பெண்கள் சம்மதஞ் சொல்லும் விஷயமாக எழுந்து பேசியபொழுது ஆண்களைக் காட்டிலும் பெண்களே போதிய அறிவால் மேம்பட்டிருத்தலின், அரசியல் விவகாரங்கட்கு அப்பெண்பாலாரும் சம்மதஞ் சொல்லுதற்கு அருகராவர் எனக் கூறினர். இப்படியான நவீன அபிப்பிராயங்களைக் கூறவிடுத்து உலகத்தோடு ஒட்டிக் கூறுவதேயல்லாமல் தத்தம் சொந்த அனுபவம் அபிப்பிராயங்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு கூறவொண்ணாது தன்பதை சட்டநிருபணசபை அங்கத்தவர்கள் மறந்துவிடலாகாது. "கண்டனம் இன்றி யாம் கலியின் எண்ணமே" என்ற பிரகாரம் போதிய அறிவிற் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் மேம்பட்டவராயிருக்கின்றார்களென்னும் அற்புதத்தை இப்பொழுதறியலானோம்.

பெண்கள் சம்மதஞ்சொல்லும் விஷயமாக, கௌரவ மிஸ்ரர் கோறியா கூறியவைகளும் மெச்சத்தக்கனவும் கைக்கொள்ளத்தக்கனவுமாம்.

"நான் சொல்வன கற்ற பெண்மணிகளுக்குச் சிறிது கசப்பாயிருந்தாலும் அவைகள் அத்தனையும் நல்ல உபதேசமாக ஏற்றுக் கொள்ளத் தக்கவைகளாம். பெண்கள் தங்கள் அரிய குழந்தைகளை அலட்சியஞ் செய்து சம்மதஞ் சொல்வதில் ஈடுபட வேண்டாது; இந்த விஷயத்தில் எங்கள் சகோதரிகள் மேலைத்தேசத்துப் பெண்களைப் பின்பற்றுவது பொருந்தவாறதும். மேலைத்தேசத்துப் பெண் உலாத்திவதப் போகும்போது, ஆயா என்னுஞ் செவிலித்தாயானவள் அழகிய குழந்தையை இன்னொரு திசையிலிருந்து நடத்திக்கொண்டுவர, உலாத்தியிருந்த சென்ற பெண் இது யாருடைய குழந்தையென்று கேட்க, ஆயா இது உமது குழந்தைதான் என்று மறுமொழி சொல்ல ஆச்சரியப்பட்டுக்கொண்டு பெற்ற தாய் அப்பால் செல்லும் இயல்புடையது மேலைத்தேசம். அந்தப் பழக்கமுஞ் செயலும் உங்களுக்கு வேண்டாம்".

கௌரவ மிஸ்ரர் கோறியா சிங்களராயிருந்தாலும் வேறு மதத்தினராயிருந்தாலும் பெண்கள் விஷயமாக அவர் கொண்டுள்ள நோக்கத்தின் பொருட்டு அவரை வியக்கின்றோம்.

## சிவஞானபோதம்.

(மூன்றாம் பாகம்)

வண்ணை, ஸ்ரீ வை. இராமநாதன் அவர்களால் அநுகரித்துப் பிரசுரஞ்செய்யப்பட்டது.

[40-ம் புத்தகம், 36-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையின் தொடர்ச்சி.]

சூத்திரம்—அ

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத், தம்முதல் குருவுமாய்த் தவத்தினின் உணர்த்தவிட்டு, அன்னியமின்மையின் அரன்கழல் செலுமே.

முதற்பாடம்.— உயிர் தன்னியல் பறியாது கருவிகளால் மயங்கி நிற்கும்

ஐம்பொறி முதலிய கருவிகளோடு கூடிப் புலவிஷயங்களை உயிர் அறியும் என்பது பெறப்பட்டது. அவ்வாறு கூடியறியும் உயிர் தன்னியல்பினையும் அறியுமா? ஆராய்வாம்.

அரச புத்திரன் ஒருவன் தன்னறிவு விளங்கிய காலம் முதல் வேடுவ சேரியிலே வேடர்கள் மத்தியிலே வளர்ந்து வருவானாயின், அவன் தன்னை வேடனாகவே மயங்கியுணருவான் அரசவுதிரம் அவனிடத்திருந்தாலும் அவனுடைய இயல்பு வேடரியல்பாகவே காணப்படும். இதுபோலவே, கருவிகளின் கூட்டுறவில் வளரும் உயிர், தனது இயல்பை அறியாது கருவிகளின் இயல்பே தனது இயல்பென மயங்கியறியும், தனக்கு வியாபக அறிவு உண்டென அறியமாட்டாது அது விரயபித்தறிதலும் இல்லை கருவிகளுக்கெட்டிய அளவிலேயே உயிர் அறியும் அக்கருவிகளறியும் அறிவிற்கதிகமாகத் தான அறியக்கூடிய சத்தி தனக்குண்டென்பதை உயிர் உணராது மயங்கி நிற்கும்.

இக்கருத்தையே இச்சூத்திரம் "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து" என்று கூறும். ஈண்டு ஐம்புலன் என்பது கருவிகள் அனைத்தையும், "அயர்ந்தனை வளர்ந்து" என்பதை "வளர்ந்து அயர்ந்தனை" என மாற்றிப் பொருள் கொண்டார் ஆன்றோர்.

இரண்டாம் பாடம்.—சிவம் உயிருக்கு அதனியல்பை உணர்த்தும்

கருவிகளின் இயல்பைத் தன்னியல்பு என மயங்கி நிற்கும் உயிர் தனது உண்மையான இயல்பை எதனால் உணரும் என்பதை ஆராய்வாம்.

உயிர் யாதானும் ஒன்றுணர்த்தப்படினன்றி உணராது என்றும்; அசத்துப் பொருள்களாகிய கருவிகள் உயிருக்கு உணர்த்தும் என்னும்; அல்லது சத்தாகிய சிவம் உணர்த்தும் என்னும் கண்டாம்.

கருவிகள், உயிரின் உண்மை யறிவை அது அறியாது மயக்க வைப்பனவாகும். இனி, சிவமும் உயிருக்கு உணர்த்தும் பொருள்களில் ஒன்றாகும். அச்சிவம் உயிருக்கு அதன் உண்மை இயல்பை உணர்த்துமாவென்பதை ஆராய்வாம்.

சிவம் மாயாகாரியம் அன்று: ஆதலினால் மயக்கத்தைத் தராது சிவம், கருவிகள் போலச் சுட்டுப்பொருள் அன்று: ஆதலினால், இச்சிவத்தால் விளக்கப்படும் உயிர், சுட்டுப்பொருள்களாகிய கருவிகளினால் விளக்கப்படும் பொழுது ஏகதேசமாய் நின்று உணருவது போல ஏகதேசமாய் நின்று உணராது

சூரியனுடைய ஒளியினாற் காணும் கண்ணானது, அச்சூரியனுடைய ஒளியைத் தன் கண்ணின் ஒளியென மயங்கி அறியாதது போல, சிவத்தினால் விளக்கமுற்ற உயிர், அதனோடு வியாபகமாய் நின்று அறிந்த போதிலும், சிவத்தினுடைய வியாபக அறிவைத் தன்னறிவென மயங்காது சூரிய வொளியாற் காணுங் கண்ணும் அவ்வொளியைத் தனதொளியென மயங்காததுபோல, உயிரும் சிவத்தினுடைய அறிவைத் தன்னறிவென மயங்குதலில்லை. அவ்வறிவால் தன்னுண்மை யறிவினையே அறியும்.

வேடர் சேரியில் வளர்ந்த குமாரனுக்கு அவன் தந்தையாகிய அரசன் 'நீ அரச குமாரன், அரசவாழ்வு யாவும் உனதுடையதே' என்று உணர்த்த அக்குமாரன் உணருமாறுபோல, உயிருக்கும், சிவம், 'நீ சடமல்ல, சித்து, என்பானுன்ன பேரின்பம் முழுவதும் உன்னுடையதே' என்று உணர்த்த உயிர் உணர்வதாகும். இவ்வுணர்ச்சியைக் கொண்டு, உயிர் தத்துவங்களாகிய கருவிகளினியல்பையும் தன்னியல்பையும் பிரித்து உணர்வதால் இது தத்துவஞானம் எனப்படும். இக்கருத்தையே இச்சூத்திரம் "எனத் தம்முதல்...............உணர்த்த" என்று கூறியது.

மூன்றாம் பாடம்—சிவம் உயிருக்கு அதனியல்பைக் குருவுமாயுணர்த்தும்.

சிவம் உயிருக்கு அதனியல்பை யுணர்த்துமென்றும்; எக்காலத்தும் எல்லாவுயிர்கட்கும் உள் நின்று உணர்த்தும் என்றும் கண்டாம். உயிருக்கும் அதன இயல்பைச் சிவம் உணர்த்துவதும் அவ்வாறு அன்றி வேறு விதமா என்பதையாராய்வாம்.

சிவம் உயிருக்கு உள்நின்று உணர்த்துவது அவ்வுயிரின் பொதுவியல்பே, அதாவது, உயிர் கருவிகளோடு கூடியறியும் போது அதன்பாற் காணப்படும் இயல்பு. ஈண்டுச் சிவம் உணர்த்துவதாய்க் கூறும் இயல்பு; உயிர், கருவிகளினின்றும் அவைகளின் வாசனையினின்றும் நீங்கிய போது, உயிரினிடத்துக் காணப்படுமியல்பு. (யோகங்கடந்தநிலை அதாவது உயிரின் சிறப்பியல்பாம் இச்சிறப்பியல்பையும் சிவம் உள்நின்று உணர்த்தினால் எல்லா உயிர்களும் உணரமாட்டா. அன்றியும் இவ்வியல்பை எல்லா உயிர்களும் ஒன்றுபோல உணரமாட்டா.

ஒரு பள்ளியில் வாசிக்கும் எல்லா மாணவர்களும், ஒரு ஆசானால் உணர்த்தப்பட்டாலும், ஒன்றுபோ லறியமாட்டார்கள். சில சாமான்ய விஷயங்களையே அவ்வாறு ஒன்றுபோல உணர்வர் அரிய பெரிய கடின விஷயங்களை அவ்வாறு ஒன்றுபோல் எல்லாப் பிள்ளைகளும் உணரமாட்டார். அவ்விஷயங்களை அவரவர் அறிவின் பக்குவத்திற்கேற்பப் படிக்கிரமமா யுணர்த்தல் வேண்டும், அம்மாணவர்களை அவரவர் பக்குவத்திற்கேற்பப் பகுப்பாகப் பிரித்து, ஒவ்வொரு பகுப்பார்க்கும் ஒருசேர உணர்த்தல வேண்டும். சிவம் உயிருக்குச் சிறப்பியல்பை யுணர்த்துவதும் இவ்வாறேயாமென்க

உயிர்கள், தம் அறியாமைத் திட்பத்திற்கேற்ப மூன்றுபிரிவி லடங்குவன என்று அறிஞர் கூறியுள்ளார் உயிர்களின் அறியாமைக்குக் காரணம் ஆணவமலம் என்று முன் கூறப்பட்டது இவ்வாணவம், ஓர் வகுப்பு உயிர்களைச் சூக்குமமாய் சொற்பமாய்ப் பிணித்து நிற்கும். இவ்வகுப்பு உயிர்களையே விஞ்ஞானகலர் என்பது. இவ்வுயிர்கட்கு மாயை கன்மங்களின் பந்தம் இல்லை. இரண்டாவது வகுப்பாகும் பின்னோர் பகுப்பாரை ஆணவமலம் தூலதரமாய் (மிக அதிகமாய்)ப் பிணித்து நிற்கும். இவ்வகுப்பாரையே சகலர் என்பது. இவ்வகுப்பினையே நாம் சேர்ந்துள்ளோம் நமக்கு ஆணவம் மாயை, கன்மம், ஆகிய மூன்றினது பந்தமும் உண்டு. இவ்விரு வகுப்பிற்கும் இடையே உள்ள வகுப்பார் பிரளயாகலர் எனப்படுவர் இவர்கட்கு மாயையின்பந்தம் இல்லை ஆணவமும் கன்மமுமே பந்தித்து நிற்கும். இவர்களை ஆணவம் தூலமாய் (அதிகமாய்ப் பந்தித்து நிற்கும்.

இவ்வாறு மூன்றுவிதமான அறியாமையின் பெற்றியையுடைய உயிர்கட்கு ஒன்றுபோ லுணர்த்தினால் அவைகள் ஒன்றுபோ லுணரமாட்டா. அதனாலேயே சிவம் உயிர்கட்கு மூன்று வேறுவிதமாக உணர்த்தும் என்றது.

விஞ்ஞானகலருக்கு, பொதுவியல்பை யுணர்த்துவதுபோலச் சிவம் உள்நின்று உணர்த்தினாற் போதும். அவை தமது உள்ள இயல்பை உணருவார்கள்.

பிரளயாகலருக்கு அது போதாது; அவ்வுயிர்கட்கு உபதேச முகத்தால உணர்த்தவேண்டும் அவ்வாறுணர்த்துதற்கே, சிவம் உருவத்திருமேனி, கொண்டு அவ்வுயிர்களின் முன்பு தோன்றி யுணர்த்தும்

இவ்வுபதேசமும் சகலராகிய எமக்குப் போதாது நமக்கு நூல்முகமாயும் அனுபவமுகமாயும் உணர்த்தல் வேண்டும். இவ்வாறுணர்த்தற்குச் சிவம் தனது இயற்கைவடிவிற் றோன்றி யுணர்த்தினால் மாத்திரம் போதாது. ஓர் குருவடிவிற் றங்கிநின்று நூல்முகத்தானும், அனுபவமுகத்தானும் உணர்த்த, நாமும், அவ்வுபதேசமொழிகளைக் கேட்டுச் சிந்தித்து உணருதல் வேண்டும் தெளிதல் வேண்டும். இவ்வாறு சிவம் நமக்கு உணர்த்துவதையே இச்சூத்திரம் "தம் முதல் குருவுமாயுணர்த்த" என்றோதியது ஈண்டுக் "குருவுமாய்" என்பதிலுள்ள உம்மைச்சொல்லால், நமக்கு இதுகாறும் உள்நின்றுணர்த்தியதும் அன்றிக் குருவுமாய் முன்னின்று முணர்த்துமென்பது பெறப்படும்.

இதற்குச் சான்றாகத் தேவார திருவாசகங்களில் ஆங்காங்கு மெய்ப்போக்க பொருளமைய நாயன்மார் திருவாய்மலர்ந்தருளி யிருப்பதை ஊன்றியுணர்க.

(தொடரும்.)

## குமரேச சதகம். ௨௬.

—:o:—

பேயெனப்படுவோரிவரெனல்.

கடனுதவு பேர்வந்து கேட்கும்வேளையின்
கடுகடுக்கின்ற பேயும் [முகங்
கனமருவு பெரியதனம் வந்தவுடனிது
கண்விழிக் காத பேயும் [மாத்து
அடையுடன் சத்துருவின பேச்சைவிசு
தகப்பட்டுழன்ற பேயு [வாசித்
மாசைமனை யாளுக்கு நேசமா யுண்மை
யானதை யுரைத்த பேயும் [மொழி
இடரிலா நல்லோர்கள பெரியோர்களைச்
செண்று துரைத்த பேயு [சற்று
மினியபரிதானத்தி லாசைகொண்டொ
ருகெடுக்கண செய்திட்ட பேயும்[ருவற்
மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்
வசைபெற்ற பேய்களன்றோ [பேயும்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

இ-ள். கடன் கொடுத்தவர் (தனிகர்) வந்து கடனைத் திரும்பக் கேட்கும்போது முகஞ்சுளித்துக் கோபிக்கும் பேய்த்தன்மையுடையவனும், மிகவும் அதிக செல்வம் (இடையில்) வந்து சேர்ந்தவுடன் கர்வங்கொண்டு எவரையும் கண்ணெடுத்துப் பார்க்கும் காருண்ணியமில்லாத பேய்த்தன்மை யுடையவனும், பகைவனுடைய பேச்சை முழுதுநம்பி அவனிடத்திற் சிக்கித் துயரப்படும் பேய்த் தன்மையுடையவனும், அன்புள்ள தன் பெண்டாட்டிக்குத் தன் குறையைச் சொல்லுகின்ற பேய்த்தன்மை யுடையவனும், தீமையில்லாத நல்லவர்களையும் பெரியோரையும் சிறிதும் மதியாது நிந்தனைசெய்யும் பேய்த்தன்மை யுடையவனும், இலஞ்சத்திற்கு ஆசைப்பட்டு நீதிதிறம்பிப் பிறருக்குத் துன்பத்தைச் செய்யும் பேய்த்தன்மை யுடையவனும், யௌவனத்தைக் கொடுக்கக்கூடிய மனையாளிருக்க அவளை விடுத்துப் பொதுமகளிருடன் சகவாசஞ் செய்யும் பேய்த்தன்மை யுடையவனும் வசையுடன் கூடிய பேய்களாவர்; மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே எ-று.

பரிதானம் - இலஞ்சம்; கைக்கூலியென இக்காலத்திற் சொல்லப்படும். மடம் - மகளிருக்குரிய நாற் குணங்களில் ஒன்றெனினுமாம். பேய்களின் செயல் அப்பேய்களுக்கு இயல்பாக, மேலான மானுடப்பிறவி யெடுத்தவன் இப் பேய்த்தனமானசெயல்களைச்செய்தலின் "வசை பெற்றபேயகள்" என்றார். அரோ அசை.

### காலநிலை.

சென்ற நான்கு நாட்களாக மழை இடைவிடின்றி அடைத்துப் பெய்து இன்றுகாலை சிறிது வெளித்தது. ஆனால் பின்னர்ப் பழையபடி மூடிக்கொண்டது.

### தான வரவு.

வண்ணார்பண்ணை கிழக்கு ஸ்ரீ ச. விநாயகமூர்த்திச்செட்டியாரின் இரண்டாவது புத்திரன் இராமநாதனின் அபரக்கிரியையில் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றோம்.

### தேசாதிபதியவர்களின் மாளிகை.

கொழும்பிலுள்ள இராசமாளிகையைத் திரும்பக்கட்டும் விஷயத்தை ஆலோசித்து அறிக்கை செய்யும்படி நியமிக்கப்பட்ட சங்கத்தார் பழைய மாளிகை இருந்த இடத்தில் ஒரு புதிய மாளிகை யமைக்க வேண்டுமென்று அறிக்கை செய்திருக்கிறார்கள். இந்த மாளிகை கடலைப் பார்த்தவண்ணம் இருத்தல்வேண்டுமெனவும் கூறியிருக்கின்றார்கள். இப் புதிய மாளிகையை யமைத்தற்கு ரூ.22,50,000 செலவாகுமென மதிப்பிடப் பட்டிருக்கிறது.

### மறைந்துதிரிந்த கொலைஞன் பிடிக்கப்பட்டான்.

வட்டவாலாவிலுள்ள பனுச்சி என்னுந் தோட்டத்தில் கூலியாளாகவிருந்த பழனியாண்டி என்பவன் சிலமாசங்கட்கு முன்னர் தனது மனைவிக்கு ஆபத்தான காயமும் வருவித்துத் தனது 14 மாத வயதுள்ள குழந்தையையுங் கொன்றுவிட்டு மறைந்து திரிந்தனன். இவன் இப்பொழுது அக்ரோயா என்னுந் தோட்டத்தில் பற்றைக்குள் மறைந்திருந்தசமையத்தில் பொலிசாரால் பிடிக்கப்பட்டிருக்கிறான்.

### ஆடுமாடு இறக்குமதி செய்தல் தடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கோமாரியென்னும் நோய் பரவியிருத்தலினாலே 1929-ஆம் ஜனவரிமீ 1ௗ தொடக்கம் இந்தியாவிலிருந்து இறைச்சிக்காக ஆடு மாடுகளை இறக்குமதி செய்தல் தடுக்கப்பட்டிருக்கிறதெனவும், 1929-ம் ஆம் ஏப்பிரல்மீ 1ௗ தொடக்கம் ஒவ்வொரு மாசத்தின் முதல் வாரத்தில் பாற் பசுக்களை இறக்குமதி செய்தல் தடுக்கப்பட்டிருக்கிறதெனவும் அரசாட்சியார் விளம்பரஞ் செய்திருக்கின்றனர். அதற்குரியபிரமாணங்கள் பின்னர் வெளியிடப்படும்.

## கிணற்றுள் வீழ்ந் திறத்தல்.

ஞாயிற்றுக்கிழமை (நியாலவியன்று) இரவு கொக்குவில் மேற்கிலுள்ள ஒருவர் தம் வீட்டிலுள்ள கிணற்றுள் வீழ்ந்து விடித்தபின் பிரேதமாகக் காணப்பட்டனராம். பெருமழை பெய்கின்றமையால் இப்பொழுது கிணறுகள் குளங்கள் மற்றை நீர்நிலைகளெல்லாம் தண்ணீர் நிறைந்தபடி காணப்படுகின்றன. ஆதலால் கூபங்களிலே தண்ணீர் மொள்ளுவோரும் குளங்களிலும் மற்றை நீர்நிலைகளிலும் ஸ்நானம் முதலியனசெய்வோரும் மிக்க அவதானமாகவிருத்தல் வேண்டும்.

## பையன் ஒருவனின் பிரேதம் ஒருவாரத்திற்குப்பின் கண்டெடுக்கப்பட்டது.

**சென்ற அக்டோபர்மீ 28௨ கட்டுக்காஸ்தோட்டையில் மகாவலி கங்கையாற்றை நீந்திக் கடக்கமுயன்றபொழுது ஆற்றில் அமிழ்ந்தி யிறந்த நற்காயகன் னு 'பையனின் பிரேதம் எட்டுமைல் தூரத்திலுள்ள கணவத்தைஎன்னுமிடத்தில் சென்ற நவம்பர்மீ 4௨ ஞாயிற்றுக்கிழமை பதனழிந்த நிலைமையில் கண்டெடுக்கப்பட்டது. அவ னணிந்திருந்த நீலநிறக் காற்சட்டையால் அவனை இன்னானென அறியக்கூடியதாயிருந்தது. அந்த விடத்திலேயே அப்பிரேதத்தை அடக்கஞ்செய்துவிட்டனர்.**

## இறைச்சிக்கு அடிக்கமுன் நிஷ்டூரம் செய்தமை.

**கட்டுக்காஸ்தோட்டையிலுள்ள மூகம் மதுசாய்பு என்பவன் இறைச்சியடிக்கக் கொண்டுபோன பசுவொன்றுக்குச் சித்திரவதை செய்தானென மாத்தளைப் பொலிஸகோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தான். அப்பசு படுக்கையினின்றும் எழுந்திராதசமையத்தில் அவன் அதன் வாலை இரண்டு தடிகளுக்கிடையிற் பிடித்து உருவினமையினால் வாலின் தோல் உரிந்து போய்விட்டதெனக் கூறப்பட்டது. அவன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும், நீதிபதி "நீ இப்பொழுது ஒப்புக்கொண்ட குற்றத்திற்காகச் சிறை விதிக்கப்பட வேண்டியவன். குறித்த மாதிரியாகப் பேசமாட்டாத மிருகத்தை நடத்துவது மனுஷத்துவமல்ல எப்படியென்றாலும் இம்முறை உன்னை அபராதத்தோடு விடுகிறேன்" எனக்கூறி ரூபா 75 அபராதம் விதித்தனர்.**

## தேகவியோகம்.

சென்ற அக்டோபர்மீ 6௨ சனிக்கிழமை, மானிப்பாய் ஸ்ரீ ஆறுமுகப்பிள்ளை மகாலிங்கமவர்களின் பத்தினியும் மாத்தளையிலுள்ள பித்தியாகந்தைத் தோட்டத்தில் உத்தியோகமாயிருக்கும் ஸ்ரீ V. கணபதிப்பிள்ளையென்பவரின் சிரேட்ட புத்திரியுமாகிய ஸ்ரீமதி ராசம்மாள் தனது 25-ம் வயசில் தேகவியோகமாயினர். இம்மாதின் அபரக்கிரியைகள் நவம்பர்மீ 4௨ ஞாயிற்றுக்கிழமை பல சுற்றமித்திர சமுகத்திற் சிறப்பாகச் செய்யப்பட்டன. இப்பெண்மணியின் அகாலமரணம் பரிதாபமானதாம். மேற்படி அபரக்கிரியையில் யாழ்ப்பாணந் சைவபரிபாலன சபையாருக்குத் தானமாக வரிந்தனுப்பிய ரூபா 2. பெற்றும்.

—கொழும்பு காகில்ஸ் என்னும் வியாபார சமுதாயத்தில் (Messrs Cargills Lt. உத்தியோகம் வகித்திருக்கும் ஸ்ரீ ந. சிவக்கொழுந்து அவர்களின் பிரியபத்தினியும், சந்தர்மடத்தடியி லிருக்கும் பிரபல சுருட்டு வியாபாரி ஸ்ரீ ம. நல்லதம்பியவர்களின் குருவியுமாகிய ஸ்ரீமதி முத்தம்மாள் காத்திராப் பிரகாரம் எழுந்த காயாகுவாதநோயினுல் சென்ற புதன்கிழமை யிரவு தனது மாமனார் இல்லத்தில் தேகவியோகமாயினர். இவருடைய அபரக்கிரியைகள் அடுத்தநாளாகிய வியாழக்கிழமை சுற்றமித்திர அயலவராகிய பல சனசமுகத்தில் இவரது ஏகபுத்திரனுல் விதிப்படி செய்யப்பட்டன. இவருடைய அகாலமரணம் பெரிதும் பரிதாபப்படத்தக்கதே.

—வடடுக்கோட்டை நாகேசுரஐயர் புத்திரனும், ஆரியதிராவிடபாஷா வித்துவானும் தமிழ் நாட்டில் கவித்துவத்தில் கீர்த்தி பெற்றவரும், கந்தசஷ்டி புராணம் சிவராத்திரி புராணம் ஏகாதசிப்புராணம் விநாயக சஷ்டிப்புராண இலங்காமான்மியம் முதலிய பத்திய நூல்களுக்கும், வெள்ளிக்கிழமை விரதம், நவராத்திரி மான்மியம் முதலிய கத்திய நூல்களுக்கும், வேதாந்த நாடகமாகிய இரத்தின நட விலாசம் முதலிய நாடகங்களுக்கும் ஆக்கியோனும், சிவபூசா துரந்தரரும், திருக்கேதீச்சரம் முதலிய ஆலயங்களில் பிரதிஷ்டை செய்த குருசிரேஷ்டரும், கண்ணலிங்கேசுவரர்கோயில் தருமபரிபாலகரும், மணிமந்திரஒளடத நிபுணரும் ஆகிய பிரமஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவாசாரியாவர்கள் இந்த ஐப்பசிமீ 14௨ (30—10—28) செவ்வாய்க்கிழமை இரவு 79-ம் வயதில் நல்லூரில் தமது மைத்துனர் பிரமஸ்ரீ ந. வே. கார்த்திகேசுக்குருக்கள் அவர்கள் கிருகத்தில் சிவபதப்பிராப்தியாயின சென்றும் துக்க செய்தியை யறிந்து நாமும் இவரது சுற்றத்தாரோடு அனுதாபப்படுகின்றோம். —பதி.

## வட்டுக்கோட்டைப் பயங்கர கொலைகள்.

வட்டுக்கோட்டையில் தங்கத்துரை ஐயரதும் மனைவியரதும் கொலை விஷயமாகப் பின்னருஞ் சில விசாரணை நிகழ்ந்தன. துறந்த ஐயரின் பிரேதத்தையும் மற்றை 3. பிரேதங்களையுஞ் சோதனை செய்த டக்டர் சோமசுந்தரமென்பவர் தங்கத்துரை ஐயரே தம் மனைவிமக்களை வெட்டிக் கொன்று விட்டுத் தாமும் தற்கொலை செய்திருக்க வேண்டுமெனப் பொலிஸ் நீதிபதி முன் அபிப்பிராயங் கூறியதை இப்பத்திரிகையில் முன்னர் வெளியிட்டேம். இதன்பின்னர் இரகசியப் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் இரகசியப் பொலிசர் இருவரும் கொழும்பி லிருந்து இங்கே வந்து விசாரணையும் ஆராய்ச்சியுஞ் செய்தனர். வட்டுக்கோட்டை ஸ்ரீ செல்லத்துரை யென்பவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கொண்டுவந்து பொலிஸ்தானத்தில் விசாரிக்கப்பட்டுப் பின் பிணையில் விடப்பட்டார். அதன் பின்னர் டெபியூற்றிப் பொலிஸ் தலைமை உத்தியோகத்தர் யாழுப்பாணத்திற்கு வந்து வட்டுக்கோட்டையில் இப்பயங்கர கொலை நடந்த இல்லத்தையும் பார்த்து மீண்டனர். சென்ற வியாழக்கிழமை (8-11-28) யாழ்ப்பாணம் பொலிஸ் நீதஸ்தலத்தில் பொலிஸ் உத்தியோகத்தராகிய மிஸ்டர் சௌஜா என்பவர் இந்தக் கொலை விஷயமாக டக்டர் சோமசுந்தரத்தையும் இன்னுஞ் சிலரையும் விசாரணை செய்தல் வேண்டுமென்று நீதிபதியைக் கேட்டனர்; விசாரணை நடந்தது.

சௌஜா—தங்கத்துரை ஐயருடைய பாதம் கிலத்திற பட்டபடி இவர் தொங்கக் காணப்பட்டாரா?—ஆம்.

நீதிபதி—பாதத்தின் எந்தப்பகுதி?

டக்டர்—குதிக்கால்தான் நிலத்திலே நீண்டியபடி காணப்பட்டன.

சௌஜா—அவருடைய கை விரல்களில் ஏதும் ஊறுகள் காணப்பட்டதா?—ஆம்.

சௌஜா—உள்நோக்கிய ஊறுகளா? வெளிநோக்கிய ஊறுகளா—வெளிநோக்கிய ஊறுகள்

நீதிபதி—(சௌஜாவைப் பார்த்து) இந்தக் கேள்வியை நீர் கேட்கும் நோக்கமென்ன? (மறுமொழியில்லை)

டக்டர்—ஒரு கையால் வெட்டப்படும் பொருளையும் ஒரு கையாற் கத்தியையும் பிடித்துக்கொண்டு வெட்டுவதனுல் அந்த ஊறுகள் வருதல் கூடும்.

நீதிபதி—அப்படியெல்லாம் முந்தியே நாங்கள் கொள்வதற்கு எவ்வகையான ஆவசியகமுமில்லை.

[சௌஜா இது தற்கொலையென்று ருசுப்படுத்த முயலுகின்றார்" என்று ஒருவார்த்தை அந்தச் சமையத்தில் அங்கிருந்த நியாயவாதிகளுள் ஒருவர் வாயினின்றும் பிறந்தது]

சௌஜா—குறித்த அறையுள் 2 கட்டில் இருப்பக் கண்டீரா?—ஆம்

நீதிபதி—(சௌஜாவைப்பார்த்து)கட்டில்களுக்கும் டக்டருக்கும் என்ன சம்பந்தம்?

சௌஜா—ஐயர் தூங்கும்போது கட்டிலில் முட்டுண்டுதான் முழந்தாள்களில் ஊறுகள் உண்டாயிருக்கக் கூடுமென்றெண்ணி இக்கேள்வியைக் கேட்டேன்.

நீதிபதி—கட்டில்கள் இருப்பதையும் இல்லாததையும் அந்த அறைக்குச் சென்று பார்த்த நீரேனும் மற்றவர்களேனும் சாட்சிக் கூட்டில் எதிச் சாட்சி சொல்லும்போது கூறிவிடலாமே; அந்தக்கேள்வியை டக்டரிடம் கேட்கவேண்டியதில்லையே.

சௌஜா—முழந்தாள்களில் எவ்வகையான ஊறுகள் காணப்பட்டன?

டக்டர்—உரோஞ்சுண்டமையினுல் சேர்ந்த ஊறுகளே காணப்பட்டன.

நீதிபதி—எப்பொழுது உரோஞ்சுண்டமையினுல் அந்த ஊறுகள் சேர்ந்திருத்தல் கூடும்?

டக்டர்—தூக்கும்பொழுது.

நீதிபதி—தூக்கும்போது கட்டிலில் உரோஞ்சுண்டமையாற்றுன் முழந்தாளிற்காயம் சேர்ந்தனவென்று நீர் திடமாகச் சொல்லுகிறீரா?

டக்டர்—திடமாகச் சொல்லலாம்.

நீதிபதி—நான் என்னுடைய கையை இந்த மேசை விளிம்பில் குற்றினுல் என்விரல்கள் ஊறடைதல் கூடுமென்பது எல்லாருக்குந் தெரியும். ஆனுல் ஐயர் தூங்கும்போது அவருடைய கால்கள் கட்டிற் சட்டத்திற் பட்டமையாற்றுன் ஊறுபட்டனவென்று நீர் நிர்க்கமாகச் சொல்லமுடியுமா?

டக்டர்—நிர்க்கமாகச் சொல்லமுடியாது.

நீதிபதி—அங்குச்சமுகமாயிருந்த நியாயவாதிகளைப்பார்த்து உங்களில் யாரும் குறுக்குக் கேள்விகள் கேட்கிற் கேட்கலாமென்றார் ஒருவரும் கேட்கவில்லை. நீதிபதி (பின்னரும்) இதிற் சம்பந்தப்பட்டவர்களில் யாருக்காயினும் ஏற்பட்ட நியாயவாதிகளில்லையா?

இறந்த சோத்தால் ஸ்ரீ T R. கல்லையா எழுந்து நான் ஸ்ரீ செல்லத்துரைக்காகவந்திருக்கிறேன் என்றார்.

நீதிபதி— அவர்மீது இன்னும் ஒரு குற்றமுஞ் சாட்டப்படவில்லையே.

ஸ்ரீ நல்லையா—ஆனபடியாற்றுன் நானும் பேசாமலிருக்கிறேன்,

இவ்வளவில்விசாரணையை விடுத்து நீதிபதி வேறொரு வியாச்சியத்தை விசாரணைசெய்யத் தொடங்கினர். பின்னர் மாலை நாற்தேகால் மணியளவில் நீதிபதி சௌஜாவைப்பார்த்து அந்தக்கொலைவிஷயமாக ஏதும் விசேஷமுண்டோவென்று கேட்க சௌஜா ஒன்றுமில்லையென்றனர். இதனைக் குறித்து நவம்பர்மீ 13௨ (நாளைக்கு) விசாரணை செய்வதாக நீதிபதி தவணையிட்டனர்.

தங்கத்துரை ஐயரின் தமையனாகிய சொக்கலிங்க ஐயரையும் செல்லத்துரையென்பவரையும் நீதிபதி கூப்பிட்டு இந்த நவம்பர்மீ 13௨ இந்த நியாயஸ்தலத்திற் சமுகஞ் செய்யும்படி கட்டளையிட்டனர்.

## சமாசாரக்கொத்து.

—:0:—

சென்ற வியாழக்கிழமைப் பிரசுரத்தில் சமாசாரக்கொத்திலே "வலிகாமம் வடக்கு மணியகாரன் பதவிக்கு" என்றிருப்பதை வலிகாமம் மேற்கு மணியகாரன் பதவிக்கு எனத்திருத்திக்கொள்.

* * *

இப்பொழுது இலங்கையில் 533652 ஏக்கர் நிலத்தில் 'றப்பர் செய்கைபண்ணப்பட் டிருக்கிறதென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

* * *

சென்றவாரம் நிகழ்ந்த தபாற்கந்தோர் கிளரிக்கற் பரீட்சைக்கு 164 பேரும், தபாற்கந்தோர் கீழ்தரக் கிளறிக்கற் பரீட்சைக்கு 169 பேருஞ் சென்றிருக்கின்றனர்.

* * *

ஆப்கன் அமீரவர்கள் தமது நாட்டில் வழங்கிய பட்டங்களையெல்லாம் நீக்கிவிட்டு, இனிப் பட்டங்களுக்குப் பதிலாகப் பூமியோ பொன்னோ அளிக்கத் தீர்மானித்துள்ளார்.

* * *

பெல்ஜியதேசத்து இளவரசரும் பாரியாரும், நவம்பர்மீ 23௨பெல்ஜியத்திலிருந்து புறப்பட்டு, சிங்கப்பூருக்கும் கிழைத்தேசங்களுக்கும் செல்லும் மார்க்கத்தில் இலங்கையையும் தரிசித்துச் செல்வார்கள்.

* * *

இலங்கையில் கமத்தொழிலுக்குத் தலைவராகவிருந்த கௌரவ F. L ஸ்டொக் டேல் அவர்கள், இங்கிலாந்தில் கமத் தொழில் உதவிப் போதகராக நியமனம் பெற்று இந்தமீ 21௨ இங்கிலாந்திற்குப் புறப்படுவார்.

* * *

சிங்கப்பூர் துறைமுகப் பாதுகாப்பிற்கு லண்டனிலிருந்து மூன்று 18 அங்குலப் பீரங்கிகள் அனுப்பப்பட்டுள்ளன. இவை 60 அடி நீளமும் 150 டன் கனமுமுள்ளனவாம். இவை 3333 இறாத்தல் கனமுள்ள குண்டுகளைச்சுடக்கூடும்.

* * *

மெக்ஸிகோ நாட்டில் பச்சையோந்தியைப் போல் நிறம்மாறும் பூ ஒன்று இருக்கிறதாம். இது காலையில் வெண்மையாயும், மத்தியானத்தில் சிவப்பாயும், இரவில் நீலமாயும் காணப்படுமாம். உச்சிவேளையில் தான் இம்மலர் நல்ல வாசனை யளிக்குமாம்.

* * *

இந்த 6௨ வரையில், பெரிய பிரித்தானியாவில் வேலை யில்லாமல் திண்டாடியவர்களின் தொகை 13,74,700ஆகும். இத்தொகை அதற்கு முதல்வாரத்திலும்பார்க்க 30 513 கூடியதாகும். அதற்கு முந்திய வருடத்திலும்பார்க்க 3,68,643 கூடியதாகும்.

* * *

புதுக்கோட்டைச் சமஸ்தானத்திற்கு இப்பொழுது இராசாவாகத் தெரிவுசெய்யப்பெற்றவர், காலஞ்சென்ற இராசாவின் இளைய சகோதரியின் பேரனும், இப்பொழுது இராசப்பிரதிநிதியாயிருப்பவருக்கு மருகனுமாவர். இவர் 1922-ம் ஆண்டு பிறந்தவர். இவரது பெயர் இராசகோபால தொண்டமானுகும்.

* * *

நேரத்தைச் சிறிதும் பிழையின்றிக் காட்டக்கூடிய கடிகாரங்கள் உலகிலேயே கிறீன்விச் நட்சத்திர மண்டபத்திலுள்ள இரண்டு கடிகாரங்கள் தானும். 30 விநாடிக் கொருமுறை இவற்றில் நேரம் சரிபார்க்கப் படுகிறதாம். இந்தக் கடிகாரங்களை ஆதாரமாகக் கொண்டே உலகெங்கும் நேரம் நிர்ணயிக்கப்படுகிறது.

* * *

உலகில் பேசப்பெறும் பாஷைகள் 2976. இவையில் எழுதப்பெறும் பாஷைகள் 860. இவையில் ஐரோப்பிய பாஷைகள் 48. ஆசியா பாஷை 153. அமெரிக்காப் பாஷை 424. பசுபிக் தீவுப் பாஷை 117, எனக் கணக்கிடப்பட்டது. இந்தியாவில் தனியாக 544 பேசும் பாஷையும், 179 எழுதும் பாஷைகளெனவும் ஆக 723 பாஷைகள் உள்ளனவாம்.

* * *

ஸ்விட்ஸர்லாந்து தேசத்தில் 12,000 அடி உயரமுள்ள ஒரு மலைச்சிகரம் இருக்கிறது. இச்சிகரத்தின்மீது இயற்கை இன்பந் துய்ப்பதற்காக அநேகர் ஏறுவதுண்டு. கொஞ்சக்காலமாக, இச்சிகரத்தின்மீது ஏறுவோர் பாதிவழியில் ஒரு கறுப்புப் பூனைக் குட்டியைச் சந்திக்கிறார்களாம். இப்பூனைக்குட்டி மனிதர்களைக் கண்டதும் தாவித் தாவிக் குதித்துச் சரியான வழி காட்டிக்கொண்டு மேலேறுகிறதாம். மறுபடி அவர்கள் திரும்பும்போது பாதி வழி வரையில் வழி காட்டிக்கொண்டு வந்து நின்று விடுகிறதாம். ஒருவர் இந்தப் பூனைக் குட்டியை மனிதர் வசிக்கும் இடங்களுக்குக் கொண்டு போனுல் சந்தோஷப்படுமென எண்ணி, அதைப் பிடித்துத் தமது கைப் பையில் போட்டுக் கட்டிக் கீழே கொண்டுபோனுராம். அவர் மலையடிவாரத்திலுள்ள ஒரு பட்டணத்தில் பையுடன் பூனைக் குட்டியை வைத்துவிட்டுச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், பையையும் பூனைக்குட்டியையும் காணவில்லையாம். ஆனுல் மறுநாள் மலையேறியவர்கள் பாதிவழியில் வழக்கம்போல் பூனைக் குட்டியைக்கண்டார்களாம்.

## பூணூல் தரித்தற்கு நியாயம்.

(முற்றொடர்.)

ஐந்தாவது ஆறுவது வயசில் உபாயம் செய்யாமல் ஏழாவது வயசி னிறுதியில் எட்டாவது வயசுத் தொடக்கத்தில் உபாயம் [பூணூல் தரிப்பது] செய்ய வேண்டுமென்பதற்கு நியாயம்:—

புத்திரன் பிறந்து ஏறக்குறைய ஏழு வருஷ காலத்தில் அப்புத்திரனின் சாமானிய அணுக்களும் அவைகளின் ஐக்கியானுசாதமாகிய தத்துவங்களும் பூரணமாய் வேறுபாடடையுமெனபது வைத்தியசாஸ்திர நூற்றுணிபு; அந்த ஏழு வயசுவரையில் புத்திரர்களுக்கு மாதாவினது கருப்பை சம்பந்தமான அணுக்களும் தத்துவங்களும் இசைந்து பெருகி நிற்கின்றன ஏழுவயசானவுடன் எட்டாவது வயசாவில் அப்பிள்ளையின் சொந்தமான அணுக்கள் தோன்றி அது முதல் அக்குழந்தையின் சரீரமாகின்றது. அந்தாவது மாதாவின் கருப்ப சம்பந்த மற்று அதன் சொந்தச் சரீரமாகின்றது. நன்மை தீமைகளை யறியுஞ் சக்தியின்றிக் போதனையாற்றெரிந்து கொள்ள வேண்டியது இவ் வயசாதலால் எவ்விதந் திரும்பினுந் திரும்பும்.

இவ்வயசில் செய்யப்படும் எந்த உபதேசமும் நன்றாக மனதில் பதிந்து உடன் கூடிவளர்ந்து மரண பரியந்தம் மறவாதிருக்குமென்று ஆன்றோர்கள் கொள்கை. இதபற்றியன்றோ ஒளவையாரும் "இளமையிற்கல்" இளமையிற் கல்வி சிலையிலெழுத்து என்று சொல்லினர் போலும்.

முதல் ஏழுவருஷ மாத்திரமல்ல முறையே பிரதி ஏழுவருஷத்திற்கொருமுறை சரீரத்தின் அணுக்கள மாறுகின்றன இக்காரணத்தைக் கொண்டே எந்தக் குருவையாவது ஆசரித்த போதிலும் ஏழுவருடத்திற்குக் குறையாமல் காத்திருக்க வேண்டுமென்னும் நியதி ஏற்பட்டது. தன் கட்டளையை மீறாது நடக்கின்றானோ வெனப் பரீக்ஷித்து அறிதற்கேயாம். வன்கண்மை கொண்டன்ற என்பதை அறியக்கடவர்கள். இதனைச் சுருதியுக்தி அனுபவத்தாலறிந்து கொள்ளலாம்.

பூணூற்றரித்த பாலன் "உபநீதன்" என அழைக்கப்படுகின்றான். உபநீதன் என்பது சமீபத்தில் இழுக்கப்பட்டவன் எனவே பிரபஞ்சக் குறையினின்றும் தப்பி வாஞ்சை முதலிய ஆபாசங்களைத் தவிர்த்து பிரமத்தினுல் தன் சமீபத்தில் இழுத்துக்கொள்ளப்படத் தீலையிலுள்ளவனெனப் பொருளும்.

பூணூலை மாலைபோற் றரித்து வலதுகையின் கீழாகவும் இடது தோழிலிருக்கும்படி செய்வது உபவீதமெனப் படும். இவ்விதமாய்ப் பூணூலைப் பெறுகின்றவன் உபவீதியெனப் படுவான் அவ்வாறு வலது தோளில் பூணூலைத் தரித்து அதற்கு மேல் இடது கையிலிருக்கச் செய்வது பிராசின வீதமெனப்படும். அதைத் தரிப்பவன் பிராசீனு வீதியெனப் படுவான். நிவீதமென்பது பூணூலை மாலை போல் தரித்தல். அவ்வாறு அதைத் தரிப்பவன் நிவீதியெனப் படுவான். இருடிகளை யுத்தேசித்துச் செய்துவரும் தருப்பண முதலியவைகளில் நிவீதமாகப் போட்டுச் செய்தல் வேண்டும். சிராத்தம் பிதிர்யக்ஞம் முதலியவைகளில் பிராசீனு வீதியாகப் போட்டுக் கொண்டு செய்தல் வேண்டும். தேவாலயம் பசுவின் கோஷ்டம், ஓமம், ஜெபம், வேதவோதல், போசனம், பிராமண சமூகம், குருவோமருக்குத்தருணம், அனுஷ்டானசமையம், ஆகிய இக்கருமங்களைச் செய்து வரும்பொழுதும் பூணூலை வலமாகத் தரித்திருத்தல் வேண்டும்.

சனனமரண சௌசம், ரஜஸ்வலாஸ் பிரசம், சண்டாளஸ்பரிசம், பிரேதஸ்பரிசம், பிணப்புகைஸ்பரிசம், விதவாஸ்பரிசம், சந்திர கிரகணம், துஷ்டர்களின்ஸ்பரிசம், நாய், கழுதை, இவற்றின்ஸ்பரிசம், இவைகளால் பூணூல் அபவித்ரமாய் விடும் ஆகையால் ஒவ்வொரு ஆவணி தினத்திலும் மேற் சொன்னவைகளில் ஏதேனும் நிகழ்ந்தாலும் கர்மாசாமாக இருக்கற் பொருட்டுப் புதிதாகப் பூணூல் தரித்தல் வேண்டும் கிருகஸ்தன் மனைவியோடு சேருங் காலத்திலே பூணூலைக் கழுத்தில் மாலையாகப் போட்டுக்கொண்டு பின் தேகசுத்தி செய்து உபவீதியாய்த் தரித்தல் வேண்டும்.

மலசலங் கழிக்குங் காலத்தில் பூணூலை வலக்காதில் சுற்றிக்கொண்டிருத்தல் வேண்டுமென்பதற்கு நியாயம். சகரர்களின் சந்ததியிலுள்ள பகீரத அரசனுல் ஆகாய கங்கை கொண்டு வரப்பட்டபொழுது சன்னுவ முனிவரது ஆச்சிரமத்தில் வந்தவுடன் அம்முனிவர் அக்கங்கையைப் பானம் பண்ணப்பின் பகீரத வரசன் வணங்கிக் கேட்கத் தன் காதுவழியாய் அக்கங்கையை மீண்டும் வெளிவிட்டார். ஆதலால் காதில் கங்கை வசிப்பதாகவும் அது பரிசுத்த முள்ளதெனக் கருதிக் காதில் சுற்றிக் கொள்ளுகின்றார்கள் போலும்.

பூணூல் தரித்திருப்பவர்கள் பிரம முடிச்சு அல்லது உருத்திர முடிச்சு இருதய மத்தியில் எப்போது மிருக்கும்படி செய்தல் வேண்டும். இதில் அநேக தத்துவார்த்தங்களடங்கி இருக்கின்றன. சமையம் வாய்த்தழிக் காட்டுதும்

பூணூலின்றிச் செய்யப்படும் ஓமம், தவம், விரதம், தானம், தியானம், செபம், சந்தியாவந்தன முதலிய கருமங்களெல்லாம் நிஷ்பலமாம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில், சுதுமலை.

## இலக்கம் 19

### அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

பற்கள் காரணமாய் உண்டாகும் நோய்கள். சிறுபிராயத்திலுள்ள மூலகாரணங்கள்.

அசையாத பற்களைப் பேணம் பண்ணிக்கொள்வது எவ்வளவு முக்கியமுள்ளதோ அதுபோல் குழந்தைப்பருவத்திலுள்ள பிள்ளைகளின் பற்களையும் பேணம் பண்ணிக்கொள்ளவேண்டும். ஏன் எனில் குழந்தைகளின் பற்கள் கூடாமலிருந்தால் அக்காரணமாய் உண்ணுக்கு நோய்களும்பொருமினவிலசாரம்புகளும்காதுக்குத்து, இருதயபெலயீனம் முதலிய நோய்களுமுண்டுபட்டு அவைகளின் ஜீவியகாலம் வரையிலும் காணப்படவேண்டியிருக்கும். அல்லது அவைகளின் வாழ்நாட்களைத் தானுங் குறைத்துவிடும். குழந்தைப்பருவத்தில் ஒருவரின் பற்கள் கெட்டுப்போகுமாயிருந்தால் ஆண்மையையும் நோய்களை எதிர்க்கும் வல்லமையையும குறைக்கும். பிள்ளைகளிற் சோம்பல் தன்மையையும், பள்ளிக்கூடப்பாடங்களில் கவனக்குறைவையும், சிலவேளைகளில் பரீட்சைகளில் சித்தியடையவிடாமலும் பண்ணிவிடும். ஆனபடியால் 2½ வயதில் அல்லது 3 வயதில் ஒருவன் தன்னுடைய குழந்தையை ஒரு தந்தவைத்தியருக்குக் காட்டி அவருடைய சிகிச்சையையும் புத்திமதிகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும். நாலுவயதிற்குப்பின் ஒரு பிள்ளையைத் தந்தவைத்தியருக்குக் காட்டுவது தக்ககாலமாயிராது. ஏனெனில் இப்பருவத்தில் அப்பிள்ளையின் பற்கள் சொத்தைப்பற்களாய்ப்போய்விடும்

ஆதலால் ஒருவன் தன்னுடைய தந்தவைத்தியரை நோதந்தோறும் போய்க்காணவேண்டும், கண்ணுக்குத்தெரியாத மிகவும் சிறுத் துவாரங்கள்மூலமாய்த்தான் பற்கள் புறப்படுகிறதென்பதை நினைத்துக்கொள்ளவேண்டும். இம்மினுக்கத்தில் ஏதும் சொற்பகுறைவுகளிருந்தால் அவைகளைத்தொடக்கத்திலே மிகவும்இலேசாய் மாற்றிப்போடலாம். எற்கெனவே ஒரு தந்தவைத்தியருக்குக்காட்டி அதற்காகிய சிகிச்சைகளைச் செய்வித்துக்கொள்வது தான் அபாயமில்லாதவும் அதிகம் செலவில்லாதவும் ஓர் வழிவகையாகும். இசற்காகிய சிகிச்சை மிகவும் அற்பமானதால் குழந்தைப்பருவத்தில் செய்வித்துவிடுவதுதான் மிகவும் இலேசானகாரியம். எற்கனவே வைத்தியம் செய்வித்துக்கொள்ளுகிறதற்கு ஒழுங்குபண்ணிக்கொண்டால் தந்தவைத்தியர் ஒருநோவும் வாவிடாமல் சிகிச்சைசெய்துகொள்ளுவார். பல்விடாதிகளுக்கு ஆனாகச் சார்புள்ள பிள்ளைகள் ஒரு சுகவைத்தியரால் தங்களை வடிவாய்ச் சோதிப்பித்துப் பார்த்தும் முக்கியமாய்ப் போஷிப்புக்கு வேண்டிய ஆகாராதிகளைச் சாப்பிட்டும் வரவேண்டும்.

குழந்தைகளின் போஷிப்புக்கென நல்ல ஆகாராதிகளைத்தெரிந்தெடுப்பது மிகவும்முக்கியமான ஓர்காரியம். நல்ல தந்தவரிசைகளைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு ஒருவரின் ஆகாரம் மிகவும் முக்கியமானது. குழந்தைகளுக்குத் தாயின்பால்தான் ஆதந்திரமான உணவு. தப்பால் தானும், தாயானவள் நல்ல ஆகாராதிகளைத் தெரிந்தெடுத்துச் சாப்பிடாமலும் நோயாளியாயுமிருந்தால் சிலசில போஷிப்புக்குரிய தன்மைகள் குறைவுபட்டிருக்கும். முலைப்பாலுடன் வேறும் ஏதும் உணவுகள் குழந்தைக்குக் கொடுக்கவேணுமாயிருந்தால் கட்டாயமாய் அதைப்பற்றி வைத்தியருடன் யோசனை பண்ணிக்கொள்ளவேண்டும். அநேகம்விதமான சிறுபிள்ளைகளின் உணவுகளிலும், தடிக்கச்செய்த பாலிலிருந்து உண்டாக்கும் உணவுகளிலும ஆகாரவஸ்துக்கள் கிடையா. அப்படிப்பட்ட உணவுகள் குழந்தைகளைக் கொழுக்கச் செய்தாலும் அவைகளின் பற்களும் எலும்புகளும் பெலன் அடைந்துகொள்ளமாட்டா. பிள்ளைகள் நல்லாய் வளர்வதற்கும் எலும்புகள் பற்கள் பெலன ஏறிக்கொண்டுவருவதற்கும் சரியான உணவுகளைத்தான் தேடிக் கொடுக்கவேண்டும். முதன் முதல் குழந்தைக்குப் பல் 6-ம் மாசத்திலதான் முளைக்கும். முழுத்தந்தவரிசையும் சரியாய் முளைத்து விட 2½ அல்லது 3 வயது செல்லும். பல்வரிசை முழுதாய் முளைத்தபின்பு காலைசாப்பாட்டுக்குப் பின்னும் படுக்கப்போகமுன்னும் பற்களை நல்லாய் விளக்குகிறதற்குப் பழகிக்கொண்டு வரவேண்டும்.

நோயினால் வரும் கெடுதிகள் பலவுள. முகத்துக்குரிய அந்தக்கேடுகளை வராமல் தடைபண்ணிக்கொள்ளவேண்டும். ஒருபிள்ளையின் ஜீவியகாலத்தில் கொஞ்சநாட்களுக்குச்சரி அல்லது கொஞ்சமாசங்களுக்குச்சரி நோய் வருமாயிருந்தால் அதனால் அதினுடைய அசையாத பற்கள்தானும் சீர்கெட்டுப்போகும். 6-ம் 8-ம் வயதில பிள்ளைகளுக்கு அசையாத பற்கள் முளைக்கும்பொழுதுதானும் காணப்படும் அந்தக்கேடும் அவலட்சணத்தோற்றமும் சிலவேளைகளில் நோயின் காரணத்தினால்தான் ஏற்பட்டதாகவிருக்கும். முரசில் பல்முளைக்கிறதற்கு ஒரு விதமினுக்கம் உண்டாகும்பொழுது நோயும் சிலவேளைகளில் அங்கு உண்டுபட்டு அதன உக்கிரம் பற்கள் முளைத்துச் சிலவருடங்களுக்குப் பின்புதான் தெரிய வரும். ஆனபடியால குழந்தைகளை நோய்நடமாடுமிடங்களில் நோய் தொற்றக்கூடிய விதமாய் வைத்திருக்கப்படாது. ஏனெனில் நோய அவர்களுக்கு இலகுவில் தொற்றிவிடும். குழந்தைகள் அழவிடாமற் சமாதானம் பண்ணும் குட்டிபூதலிய கருவிகளை வைத்திருக்கவிடப்படாது. பெருவிரல் அல்லது மற்ற விரலகளைக் குடிக்கப் பழகவும் விடப்படாது. ஏனெனில் இச்செய்கைகள் முகத்திற்கும் பற்களுக்கும் சிலவேளைகளில் கிலேசமுள்ள அந்தக்கேடுகளைக் கொண்டுவந்து விடும்.

குழந்தைகளின் பல்வரிசை, நல்ல நிலைமையில் வைத்துக்கொள்வது மிகவும் முக்கியமான ஓர் காரியமென்பதை மறந்து போகக்கூடாது. அதினுடைய பற்களை நோதந்தோடே வைத்தியருக்குக் காண்பித்து அவைகளுக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்வித்து நோயணுகாமற பார்த்துக்கொள்ளவேண்டும். நோய் நடமாடுமிடங்களில் நோய்தொற்றுகிறதற்கு வசதியாய்க் குழந்தையை வைத்துக்கொண்டிருக்கப்படாது. அந்தக்கேடுகளையுண்டுபண்ணும் பழக்கங்களைப் பழகிக்கொள்ளவும் விடப்படாது. சரியான உணவுகளைக்கொடுத்துப் பற்களை அசையவிடாமற் பெலப்பிக்கவேண்டும். இனிப்பு, மதுரம், தித்திப்புள்ள உணவுப்பொருட்களை ஏராளமாய்ச் சாப்பிடவிடலாம். ஆனால் ஒருநாளும் சாப்பாட்டு நேரங்களில் இத்தின்வகைகளைத் தின்ன விடப்படாது.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவிசை சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் வண்ணார்பண்ணை மேற்கு ச. இ. கந்தையா என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | திக. | ரூபா | | பெயர் | நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| | | | 1927ஆம் மே மாசம். | | |
| 18 | 9 | 30 | ஆனைக்கோட்டை | சுப்பிரமணியம் அருணாசலம் | பொன் சைச்சங்கிலி 1 |
| 73 | 23 | 10 | கொக்குவில் | நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை | பொன் சிகில்மோதிரம் 1 |
| | | | ஜூன் மாசம் | | |
| 181 | 26 | 11 | எழுவைதீவு | கந்தையா இராசையா | பொன் பழுது சிகில் மோதிரம் 1 |
| 145 | 27 | 35 | ஆனைப்பந்தியடி | செல்லத்துரை இரத்தினலிங்கம் | சிறுபிள்ளைக்காப்புசோடி 1 |
| 186 | 28 | 70 | மானிப்பாய் | சின்னத்தம்பி குடித்தம்பி | பூவளையல் சோடி 1 |
| | | | ஜூலை மாசம். | | |
| 227 | 15 | 7 | கொட்டடி | நாகமுத்து சின்னத்தம்பி | இரட்டைசன் கல்வைத்த தோடுசோடி 1 |
| 239 | 18 | 40 | காரைதீவு மேற்கு | அம்பலவாணர் கந்தப்பு | பொன் சைச்சங்கிலி சோடி 1 |
| 246 | 21 | 12 | பெருமாள்கோவிலடி | பொன்னு துரையப்பா | இரட்டைசன் கல்வைத்த கடுக்கன்தோடு [?] 1 |
| | | | செப்டெம்பர் மாசம் | | |
| 392 | 14 | 160 | சங்கானை | தம்பிப்பிள்ளை துரைரெத்தினம் | பொன் தாலிக்கொடியுடன் முறிச்சுக்குத்திச்சோடி 1 |
| 408 | 18 | 10 | தெல்லிப்பளை | விநாயகமூர்த்தி நாகரெத்தினம் | பொன் பெட்டிமோதிரம் 1 |
| 417 | 22 | 7 | கொட்டடி | நாகமுத்து செல்லையா | பொன் சிளவர் மோதிரம் 1 |
| 418 | 21 | 10 | நீட்டுமடம் | சின்னத்தம்பி கந்தையா | பொன் சிகில்மோதிரம் 1 |
| 431 | 25 | 11 | வயாவிளான் | வயித்தியாபிள்ளை ஆசைப்பிள்ளை | பொன் சிகில் மோதிரம் 1 |
| 436 | 27 | 15 | வண்ணார்பண்ணை மேற்கு | குழந்தைவேல் செட்டியார் செந்திநாயகம் | பொன் சந்திரக்கொடியுடன் சங்கிலி 1 |
| | | | அக்டோபர் மாசம் | | |
| 462 | 4 | 9 | தெல்லிப்பளை | சின்னத்தம்பி வயிரமுத்து | பொன்மோதிர 1 |
| 466 | 6 | 40 | ஆனைப்பந்தியடி | வேலுப்பிள்ளை [?] | பொன் பீலிக்காப்பு சோடி 2 |
| 471 | 8 | 45 | ஆரியகுளம் | அருணாசலம் ஆறுமுகம் | திருவில்லாத பொன் முறிச்சுக்குத்தி அட் 1 |
| 472 | 8 | 40 | வண்ணார்பண்ணை | செல்லையா அன்னப்பிள்ளை | பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 504 | 17 | 7 | நாவலப்பிட்டி [?] | தெற்கு சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் | பொன் மோதிரம் 2 |
| 518 | 20 | 100 | வண்ணார்பண்ணை | தி. நல்லதம்பி | பொன் பீலிக்காப்பு சோடி 1, முறிச்சுக்குத்தி அட்டியல் 1 |

விற்பனவு:—விபவ வருஷம் கார்த்திகை மாசம் 9-ந் திகதிக்குச்சரியான (24—11—28) சனிக்கிழமை காலை 9 மணிதொடக்கம் எடுபட்டகடை பிறவோக்க [?] ஒழுங்கை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கொ. முருகேசம்பிள்ளை உடையார்.
லைசென்ஸ்ஹோல்டர்.

(Mis 1324)

## சத்தியாக்கிரகம்.

### ஓர் சம்பாஷணை.

II

(முற்றொடர்.)

திலகவதியாருக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். தனக்கு எழுத வாசிக்கத் தெரியாமல் இருந்த குறையை உணர்ந்து தன்பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டுமென்று விரும்பி இருவரையும் தன் செலவிலே படிப்பித்தார். பெண் பிள்ளையின் பெயர் தெய்வானை, இவளை விடுதிப் பெண் பாடசாலை ஒன்றில் பொருளை இறைத்துப் படிப்பிக்கக் கணபதியாருக்குத் துண்டாய் விருப்பமில்லை. திலகவதியாரின் பிடிவாதத்தைக் கணபதியாரால் மாற்றமுடியாது. "உன் விருப்பப்படி நடந்து கொள்ளடி அம்மா" என்று தெய்வானையின் படிப்பு விஷயத்தைக் கைவிட்டு விட்டார். மகன் கந்தையா படிப்பது கணபதியாருக்கு விருப்பந்தன். ஆனால் சம்பளக்காசு கொடுக்கும் பொழுது "என்னடா நித்தமும் சம்பளக்காசு வேண்டுமா என்று பாடிப் போட்டுத்தான் சம்பளக்காசை எடுத்துக் கொடுப்பார். இதற்குப் பயந்து கந்தையா படிக்குங் காலங்களில் தாயிடந்தான் வேண்டுங் காரியங்களுக்குப் போய் முறையிடுவது வழக்கம். சில சமையங்களில் திலகவதியின் நிலை மந்தனம் போல இருக்கும், எல்லாரும் எல்லாக் காரியங்களிலும வெற்றி யடைய முடியாது. திலகவதி தெய்வானையின் படிப்புவிஷயத்தில் பிழைத்ததுபோல் வேறு எக்காரியத்திலும் பிழைபடவில்லை. இது கணபதியாருக்குப் பெரும் அதிஷ்டமா யிருந்தது.

"பெண்பிள்ளைகளுக்கேன் படிப்பு. படிப்பிலே செலவுசெய்தகாசை வட்டிச்சீட்டிற் கொடுத்தாலும் 3000 சீதனமென்று கொடுப்பதை 6000 என்று கொடுத்து உள்ளூரிலேயுள்ள ஒரு உத்தியோககாரனுக்குச் சடங்குசெய்துகொடுக்கலாமே. பெட்டைகளின் படிப்பிற் போடும் பணம் வீண்பணந்தானே. பெட்டைகள் என்ன படித்து உத்தியோகம்பார்த்து உழைத்துக் கொடுக்கப்போகிறார்களா. பெண்கள் படித்தால் கமக்காரனைச் சடங்குசெய்ய விரும்புவார்களா? பெண்கள் அதிகம் படித்தால் அதிகம படித்தவனையல்லவா சடங்குசெய்து கொடுக்கவேண்டும். படித்தவனை விலைக்கு வாங்குவது எங்களைப்போன்ற கமக்காரருக்கு இலகுவான காரியமா? அப்படியாயிருந்தால் நாங்கள் எங்கு போயாகுதல்கொள்ளையடிக்கவல்லவாவேண்டும இத்தொல்லைகளை நினைத்தல்லவா நான் படிப்பிக்கச் சம்மதப்படாதது. கடைசியாய் இவள் தெய்வானையைப் படிப்பித்து எடுத்த பிரயோசனமென்ன. காசு கொடுத்துக் குத்தமும் வாங்கினது தானே. தெய்வானை என்ன வெள்ளை எழுந்திருக்கிறளா; மாட்டடிக்குப் போகிறளா; மாட்டுக் கொட்டிலைச் சுத்தம் பண்ணுகிறளா; வீட்டு வேலை சமையல் வேலை செய்யச் சம்மதப்படுகிறளா. அன்றைக்கு அந்தக் கிழவி திட்டிக்கொண்டு போனதென்று முருகர் சொன்னரே. ஏன் இவள அந்தக் கிழவிக்குத் தண்ணீர் குளிக்க அள்ளிக்கொடுத்தால் இவளின் கைமுறிந்துபோமா? அள்ளிக்கொடாவிட்டாலும் கிழவியோடு பட்சமாய்ப் பேசக் கூடாதா. தாய்க்கு மூத்துத் தகப்பனுக்கு வளக்குப் பிடிப்பவளா மற்றவர்களுக்கு நன்மையாயிருப்பவள்; இக் கூத்துக்கெல்லாம் இவள்தான் கால்' என்று திலகவதியைக் கண்டித்து ஏசுவது வழக்கம்.

"பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனங் கல்லும்" என்பார்கள். தெய்வானை எப்படித்தான் அடியாப் பிள்ளையாயிருந்தாலும் திலகவதியாரின் நேசம் ஒரு பொழுதும் குறையவில்லை. "இனி மேல் இந்தப் படிப்பு வேண்டாம்" என்று சொல்லிப் படிப்பை நிற்பாட்டிச் சில காலத்தால் ஒரு அத்துவக்காத்துக்கு மணஞ்செய்து வைத்தார்கள். இச்சடங்கைப் 15000 ரூபாவைச் சீதனமாகக் கொடுத்தும் பொருத்தப்பட்ட பாடு கடவுளுக்குத் தான் தெரியும்.

அத்துவக்காத்தின் தகப்பன் நல்ல விவேகி. மகனைப் படிப்பிக்கும் பொழுது "நல்ல சீதனம வாங்கலாம்; நல்ல வருமானமான தொழில்; மையனும நல்ல கெட்டிக்காரன்" என்று யூகித்துத் தான் வீடு வளவை யீடு வைத்துப் படிப்பித்தவர்.

இப்படியான ஒரு மகனுக்கு எல்லாராலும் சீதனங் கொடுக்க இயலுமா? இலங்கையைச் சீதனமாய்க் கொடுத்தாலும் தகப்பனும் மகனும் ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆனால் இலங்கையைச் சீதனமாய்க் கொடுப்பதற்கு ஒரு மகளையுடைய ராஜன் இலங்கையை ஆளவில்லையே என்று பெண்கள் சிரிப்பார்களாம். கணபதியார் செய்த அதிர்ஷ்டந்தான் ஒரு பெண் பிள்ளை பிறந்தது. இப்படி ஆறு பெண்பிள்ளை பிறந்திருந்தால் ஆண்டவனைக் கொள்ள வேண்டியதுதான். ஆனல் அப்படிப் பல பெண்பிள்ளைகளிருந்தால் நியாயமாய்க் குறைத்து வாங்கியிருப்பார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

'கணபதியாரிடம் பொருள் இருந்தபடியாலும், ஒரே மகளாயிருந்த படியாலும், மகன் உத்தியோககாரனயிருந்தபடியாலுந்தான் உயர்ந்த சீதனத்தை வேண்டினர்கள்" என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். இன்னுஞ் சிலர் பொருளைச் செலவு செய்து படித்தவனுக்கு இது பெருஞ் சீதனமா? என்றும் சொல்லுகிறார்கள். வேறு சிலர் கடைசியாக ஒருபெண் பிள்ளையைப் பெறுவதும் சரிதான், பத்துப் பெண் பிள்ளையைப் பெறுவதும் சரிதான் என்று சொல்லுகிறார்கள். பிறிது சிலர் கணபதியாரைப்போல ஈயாது பொருளைக் குவித்து வைப்பது பிழை; ஏனெனில் குவியலுக்குத் தக்க வரியைச் சீதனமாய்க் கொடுக்க வேண்டுமென்று தெய்வானையின் விவாகம் நடந்த சொற்பகாலமாய் வீட்டுக்கு வீடு இப்படிப் பல மாதிரியாயும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கந்தையாவின் தகப்பனும் அப்புக்காத்துவின் தகப்பனுக்கு வெகிகாமையில் குறைந்தவர் அல்ல. ஆனல் அத்துவக்காத்தின் தகப்பனைப்போல மூளையுள்ளவரல்ல. மகனும் (கந்தையாவும்) அத்துவக்காத்தைப்போலத் தகப்பனின் கேடகத்துக்குப் பின்மறைந்து நின்று "எனக்கு இதைப்பற்றி (சீதனத்தைப் பற்றி) ஒன்றும் தெரியாது; அப்புவைக் கேளுங்கள் அல்லது அம்மாவைக் கேளுங்கள்" என்று சொல்லத்தக்க மகனல்ல. ஏன் அப்புக்காத்துவின் தகப்பனுக்கு வெகிகாமையில் குறைந்தவர் இல்லை எனின் தெய்வானைக்குப் 15000 ரூபாவைக் கொட்டிக் கொடுக்க என்ன பைத்தியகாரனே? அவரும் 15000த்துக்குப் 15000 வாங்கலாம் என்ற தைரியத்தைக் கொண்டு தான் இப் பெருந் தொகையைச் சீதனமாய்க் கொடுத்தார். ஏன் அத்துவக்காத்தின் தகப்பனைப்போல மூளையில்லையெனின் மாப்பிள்ளையின் படிப்புக்கேற்ற சீதனந்தானே கொடுப்பார்கள், கந்தையாவுக்கு நல்ல சீதனம் வாங்குவதாயிருந்தால், கந்தையாவைச் சீமையில் விட்டுப் படிப்பித்திருக்க வேண்டும். அப்படியாயிருந்தால் எந்தக் குருடனும் 15000மல்ல 30000 தானும் கொடுப்பான். ஏழாம் வகுப்புப்படித்து முடித்து விட்டுச் சிங்கப்பூரில் கிளாக்கு உத்தியோகம் பார்க்குங் கந்தையாவுக்கு எப்படிப் 15000 ரூபாவைச் சீதனமாய் வாங்கலாம் என்று இலவு காத்த கிளிபோல் இருப்பது. இது மடைமைத்தனந்தானே. கந்தையா கொழும்பிலே ஒரு உத்தியோககாரனயிருந்தால், ஒரு பொழுது அப்படிவாங்க முடியுமென்று எண்ணியிருக்கலாம். அல்லது ஒரு ஆங்கில உபாத்தியாயராய் வந்தோடு இருந்தால், இதென்ன ஒரு வகையான ஆதாரமில்லாத ஆகாயத்திலே கோபாலனைப் போல மனக் கோட்டை கட்டினுல் அக்கோட்டை எப்படி நிலைத்து நிற்பது; இதனால்தான் கந்தையாவின் தகப்பனை அத்துவக்காத்தின் தகப்பனைப் போல மூளையுள்ளவர் அல்ல என்று முன் சொன்னேன்.

திலகவதியார் பேர் அளவிலே இரு பிள்ளைகளைப் பெற்றதே யொழிய அப் பிள்ளைகளால் தாய்க்கு ஒரு வகையான ஆறுதலும் கிடைக்கவேயில்லை. கடவுளை நம்பினவர்கள் கைவிடப்படமாட்டார்கள். திலகவதியாரின் மனம் போல, மாமலையிலுள்ள மருந்தாய்ப் பார்வதி வந்து சந்தித்தது ஒரு அற்புதந்தான். பார்வதியை அவ்வூரார் திலகவதியின் கற்கண்டு என்று புகழ்ந்து பேசிக்கொள்ளுவார்கள். பார்வதியின் தாயும் தகப்பனும் பார்வதி பிறந்த 6 மாதத்தால் இறந்து போனார்கள். பார்வதியைச் சிறிய தாயார் எடுத்து வளர்த்துவந்தார். பார்வதி சிறுபிராயமாயிருக்கும் பொழுதே திலகவதியாருக்குப் பார்வதியின்மேல் தன்னையறியாமல் ஒருபற்று உண்டாய் விட்டது. பார்வதி பொருள் அளவிலே வறியவளாயிருந்தாலும் மனமளவிலே அதிக செல்வ முள்ளவளாய் இருக்கிறள் என்பதைத் திலகவதியார் ஆரம்பத்திலேயே மற்றவர்களுக்கு அறிவித்திருந்தார். பார்பதி நல்ல தேக பலமுள்ள, அழகிய, தைரியமுள்ள, அதி விவேகமான, கடவுள் பக்தி, பொறுமை, ஈகை, சீவகாருண்ய பரோபகாரம், உண்மை, அபிமானம், கல்வியறிவு உள்ள பெண். பார்வதியின் விவேகத்தை உணர்ந்த கந்தப்பு உபாத்தியாயர், பார்வதி 8ஆம் வகுப்புப் படித்து முடித்த காலத்தில் சம்பளமில்லாது உடுவில் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு ஒழுங்கு செய்வதாகத் திலகவதியாரையும் சிறிய தாயாரையும் கேட்டும், வார்த்தையும் பயன்படவில்லை. விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றுக்குள் விழ நாங்கள் சம்மதப்படோம்; ஒரு பானை சோற்றுக்குப் பதத்தை ஒரு அரிசியிலிருந்தல்லவா அறிவது; தெய்வானையைப் பழுது படுத்தினது போதாதென்று, பார்வதியையும் கெடுத்து விடச் சொல்லுகிறீராவென்று பிடிவாதமாய் திலகவதியார் ஆசிரியரின் கேள்விக்கு மறுத்து விட்டுச் 'சுவாமி' சங்கரப்பிள்ளையிடம் கல்வி பயிற்றுவித்து வைத்தார். (வரும்)

மலாய்நாட்டு வாசி.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.